**தேயிலை ஆராய்ச்சி சபை – 2016**

தேயிலை ஆராய்ச்சி சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1993 இன் 52 ஆம் இலக்க தேயிலை ஆராய்ச்சி சபை அதிகாரச்சட்டத்தின் 15 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளிற்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புகள்**

இந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, தேயிலை ஆராய்ச்சி சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - 03**

ஜெம் வைப்புக்களுடன் காணிகளை விடுவிப்பதற்கு 2016 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், சபைக்கு சொந்தமான சென் ஜோம்ஸ் தோட்டம், ஹிடலானா, இரத்தினபுரியில் இருந்த காணிகள் 2017 ஆம் ஆண்டில் மணிக்கற்களை செதுக்கவதற்காக ஏலமிடப்பட்டிருக்க வேண்டியதற்காக தேசிய மாணிக்கம் மற்றும் நகை அதிகாரசபைக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் மேற்கூறப்பட்ட காணி தேசிய மாணிக்கம் மற்றும் நகை அதிகாரசபைக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. எனினும், இதனுடன் தொடர்புடைய தகவல்கள் நியமத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - 07**

(i) நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக பயன்படு ஆயுட்காலம் கணக்கீட்டு நியமம் 65 இன் பிரகாரம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக ரூபா 57,209,881 கிரயமான நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீட்டு பிழைகளை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கணக்கீட்டு நியமம் 50 இன் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள் வெவ்வேறாக வகைப்படுத்த கூடிய சொத்துக்களாக இருப்பதுடன், அவற்றை வெவ்வேறாக வகைப்படுத்த வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 226,166,964 தேறிய பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக அவ்வாறான வகைப்படுத்தலொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் கட்டிடத்திற்கான பெறுமானத்தேய்வு பெறுமதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்**

---------------------------------------------------

ஏதேனும் குறிப்பான கணக்கு நடவடிக்கையொன்றிற்காக நடவடிக்கை எடுக்க வேண்டிய முறை தொடர்பாக நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்காக பயன்படுத்துகின்ற கணக்கீட்டு முறைமையால் மேவுகை செய்யப்படாவிட்டால் மிகவும் பொருத்தமன முறைமையின் (கணக்கீட்டு நடைமுறைகள்) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமாயினும், அதனைக் குறிப்பிட்டு கணக்கீட்டுக் கொள்கையொன்று தயாரிக்கப்பட்டு அது பின்பற்றப்பட வேண்டிய போதிலும், சபையினால் பின்வரும் சொத்துக்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) மீளாய்வாண்டின் இறுதியிலான நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்ட பெறுமதி ரூபா 2,404,163 பெறுமதியான அருவச் சொத்துக்கள் காலக்கழிவு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டமை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்ட ரூபா 178,385,689 கிரயத்திலான தேயிலை பயிர்ச்செய்கையை முதிர்ச்சியடைந்த, முதிர்ச்சியடையாத என வகைப்படுத்தப்பட்டு தனித்தனியாக இனங்காணல். மேற்குறிப்பிடப்பட்ட தேயிலை பயிர்ச்செய்கையின் பௌதீக தன்மையை பரீட்சிப்பதன் மூலம் நடைமுறையிலுள்ள இயற்கை நிலைமையை கருத்திற்கொள்ளாமல் மேற்குறிப்பிடப்பட்ட பெறுமதி கணக்கிடப்பட்டிருந்தது.

**2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 11,727,594 தொகையை செலவழிப்பதன் மூலம் மீளாய்வாண்டில் பூர்த்தியாக்கப்பட்ட நீர் சுத்திகரிப்பு பிரிவின் கிரயம் நடைமுறையல்லாச் சொத்துக்களாக காட்டுவதற்குப் பதிலாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) உத்தியோகத்தர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கான சேமலாப நிதிய பங்களிப்பைக் கணக்கிடும் போது அடிப்படை சம்பளத்திற்கு வாழ்க்கை செலவினப் படிகள் சேர்க்கப்பட்டு அதன் மீது பங்களிப்பு கணக்கிடப்பட வேண்டும். இருந்தபோதிலும், அவ்வாறு செய்வதற்கு தவறியமையால் 2006 சனவரி முதல் 2012 மே 30 வரை அவ்வாறு நடவடிக்கை எடுக்காமையால் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 37,316,860 தொகை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலவுவைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் அதற்கான நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேற்குறிப்பிடப்பட்ட அத்தொகை 2017 பெப்ரவரி 28 இலேயே தீர்த்துவைக்கப்பட்டது.

(இ) தேயிலை தொழிற்சாலைகளில் ஆண்டில் விற்பனை செய்யப்படாதிருந்த பூர்த்திசெய்யப்பட்ட தேயிலை இறுதி இருப்புக்களை கணக்குகளில் வெளிப்படுத்துவதற்குப் பதிலாக விற்பனை வருமானத்தை கணிப்பிடும் போது கடன் விற்பனையாக கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டின் தேயிலை விற்பனை வருமானம் மற்றும் கடன்பட்டோர் மீதி ரூபா 5,216,710 ஆல் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.

(ஈ) சபையால் குத்தகை அடிப்படையில் வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்ட லமிலியர் தோட்டத்தின் இயந்திரம் ரூபா 1,010,100 பெறுமதியில் 2003 ஆம் ஆண்டில் குத்தகைக்கு விற்கப்பட்டது. எனினும், சொல்லப்பட்ட இயந்திரத்தின் கிரயம் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் கணக்குகளிலிருந்து விடுபடச் செய்யப்பட்டிருந்தது.

(உ) சபைக்கு சொந்தமான காணிகளிலுள்ள 5,654 தாவரங்களின் பெறுமதி இயற்கைச் சொத்துக்களாக இனங்காணப்பட்டதுடன் கணக்குகளிற்கு மதிப்பிடப்பட்டு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

சென் கூம்பஸ் தோட்டத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்குகளின் பிரகாரம், ரூபா 256,641 தொகை தேயிலை சிறுநிலவுடைமையாளர் அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெறவேண்டிய தொகையாக காட்டப்பட்டிருந்தது. எனினும், அதிகாரசபையின் கணக்குகளின் பிரகாரம், அது ரூபா 340,300 தொகையாகவிருந்தது.

### 2.3 பெறவேண்டிய மற்றும் கொடுக்கவேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 2,853,977 கூட்டுத்தொகையான சபையின் ஏனைய கடன்பட்டோர்களில் ரூபா 730,905 தொகைக்குச் சமனான 26 சதவீத கடன்பட்டோர்கள் 5 வருடங்களிற்கு அதிகமாகவிருந்தனர். ஆனால், அத்தகைய மீதிகளை அறவிடுதற்கு முகாமைத்துவத்தால் வினைத்திறனான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனவிதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவு | பதிலீட்டு நியமனமொன்றானது நியமனமாக மேற்கொள்ளப்படும் வரை தற்காலிக நடவடிக்கைக்காக மேற்கொள்ளப்பட வேண்டும். இருந்தபோதிலும், 01-07 வருடங்கள் காலப்பகுதிக்காக சபையின் வதிவிட பொறியியலாளர், சிரேஷ்ட கணக்காளர், பிரதி தலைவரின் 08 பதவிகள் தொடர்பாக பதில் நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. பதிலீட்டு படிகளாக 07 முன்னைய ஆண்டுகளின் போது ரூா 2,648,179 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 104(2) | மீளாய்வாண்டில் சபைக்குச் சொந்தமான 5 வாகனங்கள் 6 சந்தர்ப்பங்களில் விபத்துக்குள்ளானபோதும், நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் தொடர்பான அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 316 (2) | பாதுகாப்பு காப்பகத்தில் வைப்புச் செய்யப்படுகின்ற அல்லது அவ்வாறு வைக்கப்பட்ட இடத்திலிருந்து அப்புறப்படுத்தப்படும் பொருட்கள் தொடர்பான அறிக்கைகள் பொறுப்பு வாய்ந்த உத்தியோகரொருவரால் பராமரிக்கப்பட வேண்டிய போதிலும், நிறுவனத்தில் பாதுகாப்பகத்தில் வைப்புச் செய்யப்படும் பணம் தொடர்பாக அவ்வாறான பதிவேடொன்று பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (iii) | நிதிப்பிரமாணம் 396 | 03 வங்கிக் கணக்குகள் தொடர்பாக வழங்கப்பட்டு செல்லுபடியாகும் காலத்தை விஞ்சிய ரூபா 117,940 பெறுமதியான வழங்கப்பட்டு சமர்ப்பிக்கப்படாத 14 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/2 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.14 ஆம் பந்தி | மனித வள முகாமைத்துவம் தொடர்பான விதிகள் மற்றும் பிரமாணங்களை வழங்குகின்ற செய்முறை கோவைகள் தயாரிக்கப்பட வேண்டுமென்பதுடன் திறைசேரி செயலாளரின் அனுமதி அதற்காக பெறப்பட வேண்டும். எனினும், சபையானது அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2.5 போதியளவு அதிகாரத்தால் ஆதரவழிக்கப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

உத்தியோகத்தர்களால் எடுக்கப்படாது மேலதிகமாகவுள்ள ஓய்வு விடுமுறை கொடுப்பனவு அவர்களுடைய ஓய்வூதியத்தின் போது மேற்கொள்வது தொடர்பான செயன்முறை மீது 1995 மார்ச் 17 இல் பணிப்பாளர் சபையின் அனுமதி பெறப்பட்டிருந்தது. எனினும், திறைசேரியின் அனுமதி இதற்காக பெறப்பட்டிருக்கவில்லை. எடுக்கப்படாத ஓய்வு விடுமுறை தொடர்பில் 06 ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 213,634 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சபையின் நிதிசார் விளைவுகள் ரூபா 6,599,148 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 13,302,192 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 6,703,044 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டிற்கான சென் கூம்பஸ் தோட்டத்தின் தேறிய இலாபம் ரூபா 5,266,067 ஆல் அதிகரித்தமை மற்றும் சென் யோசியம் தோட்டத்தால் நிலைநிறுத்தப்பட்ட நட்டம் ரூபா 10,648,682 ஆல் குறைந்தமை என்பன மேற்குறிப்பிடப்பட்ட முன்னேற்றத்திற்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதிசார் விளைவுகளை மீளாய்வு செய்த போது 2012 முதல் 2016 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக நிதிசார் பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஊழியர் ஊதியம் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கருத்திற் கொள்ளும் போது சபையின் பங்களிப்பு 2012 ஆம் ஆண்டில் ரூபா 142,812,049 தொகையாகவிருந்ததுடன் அது தொடர்ச்சியாக அதிகரித்து 2016 ஆம் ஆண்டில் ரூபா 227,982,026 ஐ அடைந்திருந்தது.

### 3.2. பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

சென் கூம்பஸ் தோட்டம் மற்றும் சென் ஜோசியம் தோட்டத்துடன் தொடர்பான ஏடிபீ செயற்திட்டத்தின் இலாப விகிதங்கள் மீளாய்வாண்டின் போது சாதகமற்றதாகவிருந்ததுடன் மேற்குறிப்பிடப்பட்ட விகிதங்கள் முறையே (415) சதவீதம் மற்றும் (48) சதவீதமாகவிருந்த அதேநேரம் முன்னைய ஆண்டில் அத்தகைய விகிதங்கள் முறையே (139) சதவீதம் மற்றும் (13) சதவீதமாகவிருந்தது. சொல்லப்பட்ட செயற்திட்டத்தால் விற்பனை செய்யப்பட்ட குளோனல் கட்டிங்ஸ் இன் அளவின் வருடாந்த குறைவு இந்த விகிதத்தின் பின்னடவை ஏற்படுத்தியிருந்தது.

## 3.3 சபைக்கு எதிராக அல்லது சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முழுச் சம்பளத்துடன் வெளிநாட்டு கல்வி விடுமுறை பெற்று வெளிநாடு சென்ற 05 உத்தியோகத்தர்கள் மீண்டும் நாட்டிற்கு வருகை தராமையால் சபையுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட்டிருக்காததுடன் ரூபா 18,552,991 தொகையான 06 வருடங்களுக்கு முன்னருள்ள பிணைகளைக்கூட அறவிடுவதற்கு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டில் வெளித்தரப்பினர்களால் மூன்றாம் பிரதிவாதியாக சபையின் பெயரில் காணித்துண்டுகளை சூவிகரிக்கப்பதற்கு வழக்கு தொடரப்பட்டிருந்ததுடன் சபையின் ஊழியர்கள் முன்னராக இடம்பெற்ற பதவியில் முன்னிலையை வேண்டுதல் மூலம் சபைக்கு எதிராக 2015 ஆம் ஆண்டில் ஏனைய வழக்கொன்றை தொடர்ந்திருந்தார்கள்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

இலாபகரமான வகையில் தேயிலை உற்பத்தியின் உற்பத்தித்திறன் மற்றும் தரத்தை உயர்த்துவதற்காக ஆராய்ச்சிகளை நடாத்துதலை சுட்டிக்காட்டலுடன் 2003 இன் 30 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தால் திருத்தப்பட்டவாறு 1993 இன் 52 ஆம் இலக்க தேயிலை ஆராய்ச்சி சபையின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட தேயிலை ஆராய்ச்சி சபையின் நோக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- தேயிலையினை பாதிக்கின்ற செய்கையின் நோய்கள் மற்றும் பீடைகளிலிருந்து தவிர்த்தல் மற்றும் ஒழித்தல், தேயிலையின் தரத்தை அதிகரித்தல், உற்பத்தியைப் பல்வகைப்படுத்தல் போன்ற தேயிலை செய்கை மற்றும் உற்பத்திக்காக தாக்கமளிக்கும் அனைத்து பிரச்சினைகள் மற்றும் விடயங்கள் தொடர்பாக ஆராய்ச்சிகளை வழிநடாத்துதல், ஒத்துழைத்து மற்றும் ஊக்குவித்தல்.

- இலங்கையின் தேயிலைக் கைத்தொழிலின் எதிர்கால பொருளாதார போக்கு உட்பட அக் கைத்தொழில் துறையின் பொருளாதார நிரந்தரம் தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், அதற்காக உதவி புரிதலும், ஒத்துழைப்பு வழங்குதலும்.

- தலவாக்கலையில் அமைந்துள்ள தேயிலை ஆராய்ச்சி நிலையம் மற்றும் அதன் துணை நிறுவனங்கள் என்பனவற்றைச் சபையின் விதிகளுக்கு இணங்க பராமரித்துச் செல்லலும் நிர்வகித்தலும்

- இலங்கையிலும் வெளிநாட்டிலும் அமைந்துள்ள ஆராய்ச்சி நிறுவனங்களுடன் தொடர்பை ஏற்படுத்துதல், பேணிச் செல்லுதல்.

- சுய சக்தி செயற்பாட்டை நிறைவேற்றும் போது வெளிநாட்டு ஆராய்ச்சி நிறுவனங்களுடனும் இலங்கையின் ஆராய்ச்சி நிறுவனங்களுடனும் ஒன்றினைந்து கற்கை வேலைத்திட்டங்கள் கலந்துரையாடல்கள் மற்றும் மாநாடுகளை நடாத்துதல்.

குறித்த நோக்கங்களை அடைந்து கொள்ளுவது தொடர்பில் சபையால் நடாத்தப்பட்ட ஆராய்ச்சிகள் மற்றும் ஏனைய நடவடிக்கைகள் தொடர்பான செயலாற்றல் செயன்முன்னேற்றம் பின்வருமாறுள்ளது.

அ) 2003 – 2017 ஆம் காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம், 185 ஆராய்ச்சிகளை நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. பல்வேறு வரையறுக்கப்பட்ட காரணிகளால் 20 சதவீதத்திற்கு சமனான 38 ஆராய்ச்சிகள் பாதியில் கைவிடப்பட்டோ அல்லது பிற்போடப்பட்டோ இருந்தது.

ஆ) திறைசேரியிடமிருந்து வருடாந்தம் பெறப்பட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மானியங்களிலிருந்து ரூபா. 14,629,986 தொகையை ஏற்படுத்துவதன் மூலம் ஆரம்பிக்கப்பட்ட 07 ஆராய்ச்சிகள் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்திருக்காததுடன் அவை அரைவாசியில் இடைநிறுத்தப்பட்டிருந்தது. மனிதவளங்களில் பற்றாக்குறை இதற்கு பிரதானமாக பங்களித்திருந்தது என கணக்காய்வு பரீட்சிப்பில் வெளிப்பட்டிருந்தது.

இ) ஆராய்ச்சிகளிற்காக தேவைப்பட்ட புள்ளிவிபரங்களை வழங்குவதற்காக ஸ்தாபிக்கப்பட்ட வயோமெற்றி பிரிவிற்கு பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தர்கள் பதவி விலகும் போது குறிப்பிட்ட பிரிவானது 2013 ஆம் ஆண்டிலிருந்து மூடப்பட்டிருந்தது. இந்த துறையில் விஷேட நிபுணத்துவத்துடன் உத்தியோகத்தரொருவரை வேலைக்கமர்த்தமையால் மீளாய்வாண்டின் இறுதியளவிலும் இந்தப் பிரிவானது மீள ஆரம்பிக்க முடிந்திருக்கவில்லை.

ஈ) 2013 – 2017 ஆம் ஆண்டிற்கான கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம், தேயிலையின் சுகாதார நன்மைகள் மற்றும் ஆக்சிஜெனேற்றத்தடுப்பான் நன்மைகளை கற்பதற்காக வயோமிஸ்ரி பிரிவால் 04 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் 03 செயற்திட்டங்கள் பிற்போடப்பட்ட அதே நேரம் ஒரு செயற்திட்டம் மாத்திரமே அமுல்படுத்தப்பட்டிருந்தது. தேயிலையின் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி தொடர்பாக திட்டமிடப்பட்ட 03 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்காத அதேநேரம் 02 செயற்திட்டங்கள் கைவிடப்பட்டிருந்தது. இந்த துறையிலுள்ள மனிதவளங்களின் பற்றாக்குறை செயற்திட்டங்களை அமுல்படுத்தாமைக்கான பிரதான காரணமாக பங்களித்திருந்தது.

உ) புதிதாக பயிரிடப்பட்டு தேயிலையின் பங்களிப்பிற்கு ஆலோசனை மற்றும் விரிவாக்கல் பிரிவில் நடாத்தப்பட்ட தாய் பதர் நிகழ்ச்சித்திட்டத்தினூடாக முன்னைய மூன்று ஆண்டுகளில் போது விநியோகிப்பதற்கு மதிப்பிடப்பட்ட குளோனல் கட்டிங்ஸ் இன் தொகையில் விநியோகிக்கப்பட எதிர்பார்க்கப்பட்ட குளோனல் கட்டிங்ஸ் இன் தொகை முறையே 67 சதவீதம், 58 சதவீதம் மற்றும் 59 சதவீதமாகவிருந்தது. ஆகையால், இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் செயன்முன்னேற்றம் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைந்திருக்கவில்லை.

ஊ) தேயிலை கைத்தொழிலுள்ள பிரதான பிரச்சனையாகவுள்ள ஊழியரின் கடுமையான பற்றாக்குறையை முன்வைப்பதற்காக 2013 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட இயந்திரமாக்கல் செயற்திட்டத்திற்காக திறைசேரியால் ரூபா 100,000,000 தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டளவில் ரூபா 48,000,000 தொகை பெறப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு அதிலிருந்து 44,848,107 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட செயற்திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்ட இயந்திரங்களால் அறுவடை சேதமாக்கப்பட்டிருந்ததுடன் அத்தகைய இயந்திரங்கள் உரிய சரிவில் பயன்படுத்தமுடியாமையிருந்தமையால் செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை வினைத்திறனாக அடைந்திருக்க முடிந்திருக்கவில்லை. ஆகையால், ஊழியர் பற்றாக்குறையை அதிகரிப்பதற்கான தீர்வுகளை கண்டுபிடிப்பதற்கு இயந்திரமயமாக்கல் மற்றும் எண்ணங்கள் மாற்றுதல் தொடர்பான செய்முறை தொடர்பாக சபையின் நிதியங்களின் பயன்பாடு அவதானிக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக, ஊழியர் பற்றாக்குறையை விலக்குவதற்காக சமூக பொருளாதார நடவடிக்கைகள் இனங்காண்பதற்காக விவசாய பொருளியல் பிரிவால் வேறுபட்ட பிரதேசங்களில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 02 ஆராய்ச்சிகளை மீளாய்வாண்டிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

எ) சபையால் முகாமை செய்யப்பட்ட சென்கூம்பிஸ் மற்றும் சென் ஜோசியம் தோட்டங்கள் மற்றும் தொழிற்சாலை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், முன்னையஆண்டுடன் ஒப்பிடும் போது ஒவ்வொரு தொட்டம் தொடர்பில் விற்பனை செய்யப்பட்ட தேயிலையின் அளவு மற்றும் ஒவ்வொரு உற்பத்திச்செலவுகள் பின்வருமாறுள்ளன.

| **விபரம்** | **சென்ஜோசிம் தோட்டம்** | | **சென்கூம்பஸ் (லெமிலியர் உள்ளடங்கலாக)** | **தோட்டம் தோட்டம்** |
|---|---|---|---|---|
| | **2016** | **2015** | **2016** | **2015** |
| பச்சை தேயிலை இலைகளின் உள்ளீடு (கிலோ கிராம்) | 955,943 | 955,206 | 1,596,530 | 1,780,384 |
| தேயிலை உற்பத்தி (கிலோ கிராம்) | 202,301 | 203,273 | 358,752 | 393,378 |
| தேயிலை விற்பனை (கிலோ கிராம்) | 202,266 | 201,727 | 348,896 | 388,417 |
| உற்பத்திக் கிரயம் (ஒரு கிலோகிராமிற்கு ரூபா) | 487.42 | 436.15 | 508.67 | 481.10 |
| சராசரி தேறிய விற்பனை (ஒரு கிலோகிராமிற்கு ரூபா) | 483.23 | 393.09 | 541.91 | 475.93 |
| செய்யப்பட்ட உற்பத்தியின் உற்பத்தி விகிதம் (சதவீதம்) | 21.16 | 21.2 | 22.47 | 22.09 |

- நியம செய்யப்பட்ட தேயிலை உற்பத்தி விகிதம் 21.5

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

– மீளாய்வாண்டிற்கான சென் கூம்பல் தோட்டத்தின் தேயிலை விற்பனை வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அதிகரித்திருந்த போதிலும், விற்பனை அளவு 09 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. இதற்கு மேலதிகமாக, சென் கூம்பல் தேயிலை தொழிற்சாலைக்கு சொந்தமான தேயிலை தோட்டங்களின் உற்பத்திகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 17 சதவீதத்தால் குறைவடைந்தமை அதற்கான தேயிலை உற்பத்தியின் குறைவிற்கு பங்களித்திருந்தது.

– ஊழியர்களின் உற்பத்தித்திறன், விறகின் பயன்பாடு மற்றும் இரண்டு தொழிற்சாலைகளின் இலத்திரனியல் பிரிவுகள் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை அடைந்திருக்கவில்லை என்பதால் தேயிலையின் ஒரு கிலோவிற்கான உற்பத்திக்கிராம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அதிகரித்திருந்தது. அதற்கு மேலதிகமாக, சென் ஜோசியம் தோட்டத்தின் ஒரு அலகிற்கான உற்பத்தி கிரயம் சராசரி தேயிலை விற்பனை விலையை விஞ்சியிருந்தது.

(ii) சென் கூம்பஸ் தோட்டம் மற்றும் சென் ஜோசியம் தோட்டத்தின் செயல் நடவடிக்கைத்திட்டத்தின் பிரகாரம், பச்சை இலையின பயன்பாடு முறையே 2,120,306 கிலோகிராம் மற்றும் 1,836,826 கிலோகிராமங்களிலிருந்த. அதேநேரம் உண்மையான பயன்பாடு முறையே 1,596,530 கிலோகிராம் மற்றும் 955,943 கிலோகிராமாகவிருந்தது. ஆகையால், இது 24 சதவீதம் மற்றும் 52 சதவீதமாக முன்னேற்றத்தை குறித்துக்காட்டுகின்றது. அதனால், செய்யப்பட்ட தேயிலையின் தொகை அதற்கு மேற்கொள்ளப்பட்ட பங்கின் அடிப்படையில் வேறுபடுத்தப்பட்டிருந்தது.

ஏ) தரமான தேயிலை தாவரங்களை வழங்கும் நோக்கத்துடன் சென் கூம்பஸ் தோட்டம் மற்றும் சென் ஜோசியம் தோட்டத்தில் பராமரிக்கப்பட்ட நாற்றுமேடைகள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) முன்னைய இரண்டு ஆண்டுகளின் போது சென் ஜோசியம் தோட்டத்தில்பராமரிக்கப்பட்ட தேயிலை தாவரங்களின் நாற்றுமேடையில் நடத்தப்பட்ட தாவரங்களில் கிட்டத்தக்க 34 சதவீதமான தாவரங்களின் எண்ணிக்கை வெற்றியைத் தந்திருக்கவில்லை. நாற்றுமேடைகளின் பராமரிப்பு தொடர்பான வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை பின்பற்ற தவறியமை அதற்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

(ii) சென் கூம்பஸ் தோட்டத்தில் நாற்றுமேடையை முறையாக பராமரிக்க தவறியமையால் மீளாய்வாண்டில் ரூபா. 659,687 நட்டத்தை ஏற்படுத்துவதன் மூலம் மீளாய்வாண்டில் 23,495 தாவரங்கள் விற்கப்பட்டிருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் தலைமை அலுவலகத்தின் நூலகப் புத்தகங்கள் 1978 ஆம் ஆண்டிலிருந்து பௌதீக பரிசோதனைக்கு உட்படுத்தப்படாதிருந்ததுடன், கடந்த 20 ஆண்டு காலப்பகுதியில் (1985-2016) வெளியில் எடுத்துச் சென்ற புத்தகங்களில் மீளக் கையளிக்காததால் அவற்றை மீளக் கொண்டு வருவதற்கோ அல்லது பெறுமதியை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குறித்த நடவடிக்கைகாக வெளித்தரப்பு நிறுவனங்களிற்கு முற்பணங்களை விடுவிப்பதற்கு முன்னர், குறித்த நடவடிக்கையை மேற்கொள்வதற்கு சாத்தியத்தன்மையுள்ளதா என்பதை உறுதிப்படுத்துவதற்கு அத்தியாவசியமாகவுள்ளது. அதற்கு முரணாக, மதுஹம பிராந்திய அலுவலகத்தில் பயன்படுத்துவதற்கு நீர் அசைவற்ற அலகின் கொள்வனவிற்காக 2011 ஆம் ஆண்டில் ரூபா. 110,124 முற்பணமொன்று வழங்கப்பட்டிருந்தது. எனினும், மேற்குறிப்பிடப்பட்ட நிறுவனமானது மூடப்பட்டிருந்ததுடன் அத்தகைய பெறுமதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பயன்படுத்தப்பட்ட 08 வயல்களினதும் தெனியாய மற்றும் கொட்டாவ பிராந்திய செயலகங்கள் கட்டப்பட்ட காணிகளினதும் உரிமையாண்மையை பெறுவதற்கும் 2017 யூன் 30 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சென் ஜோசியம் தோட்டத்திற்குச் சொந்தமாக 5 ஹெக்டேயார் பரப்பளவுள்ள காணிகள் 26 வருடங்களுக்கு மேலதிகமாக வெளித்தரப்பினரால் கைப்பற்றப்பட்டிருந்தது. அத்தகைய காணிகளை மீண்டும் சபைக்கு பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சென் ஜோசியம் தோட்டத்திற்குச் சொந்தமாக 8.74 ஹெக்டேயார் பரப்பளவுள்ள நெற்காணிகள் குடியிருப்பு விவசாயிகளால் அறுவடை செய்யப்பட்டிருந்ததுடன் அதிலிருந்து சபைக்கு கிடைக்கவேண்டிய வருமானப் பங்கை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிக இறப்பர் மற்றும் தெங்கு தோட்டங்களிலுள்ள மரங்களின் எண்ணிக்கையை எண்ணிக்கையை பதவி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) ஒவ்வொரு ஆராய்ச்சிப்பிரிவினாலும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு இரசாயனங்கள் கொள்வனவு செய்யப்பட பின்னர் அதனுடைய களஞ்சியங்களில் பேணப்பட்ட இருப்பின் மீதியை கணிப்பிட்டு கணக்கீடு செய்வதற்கும் முகாமைத்துவத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 நிதிகளின் குறைப்பயன்பாடு

2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் வாழ்க்கை தரத்தை உயர்த்தும் செயற்திட்டம் மற்றும் இயந்திரமயமாக்கல் செயற்திட்டம் போன்ற விசேட செயற்திட்டங்களுக்காக பொது திறைசேரியிடமிருந்து கிடைக்கப்பெற்றிருந்த முறையே ரூபா 8,151,671 மற்றும் ரூபா 9,500,000 தொகைகள் மீளாய்வாண்டின் போதும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.4 விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சென் கூம்பஸ் தோட்டத்தின் மருத்துவ உதவியாளரின் பாதுகாப்பில் காணப்பட்ட ரூபா 201,408 பெறுமதியான மருந்துப் பொருட்கள் இருப்பு 04 ஆண்டுகளாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமலிருந்தது அத்தகைய இருப்பு பயன்படுத்துவதற்கு பதிலாக விற்கப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ இல்லங்களில் ''ஏ'' தொகுதியைச் சேர்ந்த உத்தியோகபூர்வ இல்லமொன்றும் ''டீ'' தொகுதியைச் சேர்ந்த 11 உத்தியோகபூர்வ இல்லங்களும் ''ஈ'' தொகுதியைச் சேர்ந்த 07 உத்தியோகபூர்வ இல்லங்களும் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

(இ) சென் கூம்பஸ் தோட்டத்தினதும் சென்ட் ஜோசிம் தோட்டத்தினதும் பொறி இயலளவு முறையே நாளொன்றுக்கு 8,000 கிலோகிராம் மற்றும் 15,000 கிலோ கிராம் பச்சை தேயிலைக் கொழுந்து ஆகும். எவ்வாறாயினும், அவ்வியந்திரங்களின் உள்ளவாறான சராசரி பயன்பாடு முறையே நாளொன்றுக்கு 62 சதவீதம் மற்றும் 17 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 5,000 கிலோகிராம் மற்றும் 6,253 கிலோ கிராம்களாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) தொழிற்சாலையை ஆரம்பிக்கும் போது பொருத்தப்பட்டிருந்த 04 ரோல் இயந்திரங்களில் உற்பத்தி தொழிற்பாட்டிற்காக ஒரு தடவையில் 02 இயந்திரங்கள் மாத்திரம் பயன்படுத்தப்படுவதுடன் ஏனைய 02 இயந்திரங்களும் விளைவற்றுக் காணப்பட்டன. இதற்கு மேலதிகமாக, வன்மையான வெட்டும் இயந்திரம் பயன்படுத்தாமல் அகற்றப்பட்டிருந்த அதேவேளை, E.C.P.4 Drier இயந்திரம் 16 வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியொன்றிற்கு தொடர்ந்தும் பயன்படுத்தப்படாமலிருந்தது.

(உ) விறகுகளை பயன்படுத்துகின்ற உலர் இயந்திரங்கள்சென் ஜோசியம் தொழிற்சாலையில் பயன்படுத்தப்பட்டமையால் எரிபொருளை பயன்படுத்திய இயந்திரம் விளைவற்றிருந்தது. தொழிற்சாலையால் பெறப்பட்ட பச்சை தேயிலை இலையின் அளவு குறைவடைந்தமையால் 03 வருட காலப்பகுதியொன்றிற்கு கூரான பிரிப்பான் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.5 பதவியணியினர் நிர்வாகம்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்ட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணி முறையே 443 மற்றும் 253 ஆகவிருந்தது. அதற்கிணங்க, 190 பதவிகள் வெற்றிடமாகவிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறைவேற்றுத்தரத்திலுள்ள 87 அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 38 பதவிகள் வெற்றிடமாகவிருந்தது. ஊழியர்களின் 23 பதவிகள் உள்ளக பதவியுயர்களிலிருந்ததுடன் அத்தகைய பதவிகளிற்கான ஆட்சேர்ப்பு திட்டத்திற்கிணங்க தகுதியில்லாத உத்தியோகத்தர்களினால் 05 வருடங்கள் காலப்பகுதிக்காக ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 97 நிறைவேற்றுத்தரமல்லாத பதவிகள் வெற்றிடமாகவிருந்ததுடன் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி உத்தியோகத்தரின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிகளின் எண்ணிக்கை மற்றும் அதில் உள்ளடக்கப்பட்ட விரிவாக்கல் உத்தியோகத்தர் முறையே 50 மற்றும் 24 ஆகவிருந்தது அதில் 68 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 33 மற்றும் 17 பதவிகள் வெற்றிடமாகவிருந்தது. ஆகையால், சபையின் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கல் நடவடிக்கைகளை திட்டமிடப்பட்டவாறு பூர்த்தி செய்ய முடிந்திருக்கவில்லை.

(இ) சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தர் (ஓஐசீ) 08 பதவிகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால், அத்தகைய பதவிக்குரிய கடமைகளை 08 உத்தியோகத்தர்கள் ஆற்றியிருந்ததுடன் அதனால் 2010 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை படிகளாக ரூபா 1,278,320 தொகை செலுத்துவதனால் மேற்குறிப்பிட்ட பதவிகள் தொடர்பில் பதிலீட்டு நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் தற்காலிகமாக அல்லது அமைய அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டு அதுவரை சேவையிலீடுபடுத்தப்பட்டிருந்த 112 ஊழியர்களுக்கு (ஆரம்ப தரத்தில் 105 ஊழியர்களுக்கும் 07 முகாமைத்துவ உதவியாளர்களுக்கும்) 2014 ஒக்தோபர் 24 ஆந் திகதியிலிருந்து அமுலாகும் வகையில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பீஎல் - 1 இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட சாதாரண தொழிலாளர் பதவிகளின் எண்ணிக்கை 104 ஆக இருந்த போதிலும், இந்த ஆட்சேர்ப்புக் காரணமாக அப்பதவியணியில் 39 பேர் மிகையாக இருந்தனர்.

## 4.6 வாகனங்களின் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வாகனத்தின் இயந்திரம் பயன்படுத்தப்படாமல் அகற்றப்பட்டு வேறு வாகனமொன்றிற்கு பொருத்தப்பட்டிருந்தது. எனினும், மோட்டார் போக்குவரத்தின் ஆணையாளரின் கட்டளைக்கிணங்க அத்தகைய வாகனங்களின் பதிவு சான்றிதழ்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பஜீரோ ஜீப்பொன்று முழுமையாக திருத்தாமல் 05 வருடங்களிற்கு மேலாக விளைவற்றிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

சபையினுள் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும், சபையின் பிரதான செயற்பாடுகளின் நிதி அல்லது பௌதீக செயலாற்றல் தொடர்பாகவும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் தொடர்பாகவும் எவ்வித பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மதிப்பிடப்பட்ட வருமானமும் செலவினமும் உள்ளபடியான புள்ளிவிபரங்களுடன் ஒப்பிடப்படுகையில் 13 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

### 5.3 தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர் மற்றும் பிராந்திய அலுவலகங்களின் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களை பராமரிப்பதற்காக மாதாந்த ஊழிய கொடுப்பனவினை மீளளிப்பதற்காக 2007 மே 24 ஆந் திகதி பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இத்தொழிலாளர் படிகள் நாளாந்த தொழிலாளர் சம்பளத்திற்கு உற்பத்தி உபகாரப் படிகள், மேலதிகநேர மற்றும் வருகைக் கொடுப்பனவு வேலை என்பன சேர்க்கப்பட்டு கணிப்பிடப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டில் முதல் 09 மாதங்களில் 10 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 1,790,177 தொகை சபையால் மீளளிக்கப்பட்டிருந்தது. இதற்காக வரிசை அமைச்சினதும் திறைசேரியினதும் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாதிருந்ததுடன், 2014 நவம்பர் 19 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுக்கூட்டத்தின் அனுமதியை பெறுவதற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) அந்தந்த விடயங்களுக்குரிய சுற்றறிக்கைகள் மற்றும் சமமான ஏனைய நிறுவனங்களை விஞ்சி சபையினால் பதவியணியினருக்கு வழங்கப்படும் விடுமுறைகள், உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் பயன்படுத்தப்படுகின்ற நீர், மின்சாரம் என்பவற்றிற்காக கட்டணங்களை அறவிடாமை போன்ற வரப்பிரசாதங்கள் தொடர்பாக திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தேயிலையைத் தயாரிப்பதற்காக சபையினால் 1982 ஆம் ஆண்டின் போது ரூபா 4,142,173 செலவிடப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரம் செயற்திட்டத்திற்கு பொருந்தாததால் விளைவற்றுக் காணப்பட்டது. இப்பெறுமதியைத் திறைசேரியின் அங்கீகாரத்துடன் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இதுவரை கணக்குகளிலிருந்து அகற்றப்படாதிருந்ததுடன், நடைமுறைவேலையாக தொடர்ந்து காண்பிக்கப்பட்டிருந்தது

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் உள்ள குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | | அவதானிப்புகள் |
| --- | --- | --- |
| (அ) | கணக்கீடு | முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களை மதிப்பிட்டு கணக்கிடுவதற்கு தவறியமை. |
| (ஆ) | சொத்துக்கள் கட்டுப்பாடு | வாகனங்களின் உரிமையாண்மையை எடுப்பதற்கும் திருத்தங்களை முறையாக மேற்கொள்வதற்கும் தவறியமை. |
| (இ) | ஏடுகள் மற்றும் பதிவேடுகள் பேணாமை | குறித்த நேரத்தில் நிலையான சொத்துக்கள் பதிவேட்டை பேணுவதற்கு மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் சபைக்கு சொந்தமான சொத்துக்கள் உள்ளடக்க தவறியமை. ஜீ. ஏ.என் 20 இற்கு இணங்க பெறுகை புத்தகங்கள் தொடர்பாக பதிவேடு பராமரிக்க வேண்டிய போதும் இரத்தினபுரியிலுள்ள பிராந்திய அலுவலகம் அதற்கேற்ப மேற்கொண்டிருக்கவில்லை. |
| (ஈ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கிடையே கருத்திற் கொள்ளக்கூடிய முரண்கள் அவதானிக்கப்பட்டமை |
| (உ) | ஆராய்ச்சி நடவடிக்கைகள் | ஆராய்ச்சி நடவடிக்கைகளின் மந்தமான முறைப்படுத்தல் |
| (ஊ) | இருப்புக் கட்டுப்பாடு | ஒருமுகப்படுத்தப்பட்ட களஞ்சியங்களில் ஆராய்ச்சிகளிற்காக கொள்வனவு செய்யப்பட்ட இரசாயனங்களை சேமித்து அதன்மூலம் தேவையான அளவுகளை விநியோகிப்பதற்குப் பதிலாக அத்தகைய இரசாயனங்கள் ஆராய்ச்சிப்பிரிவிலுள்ள களஞ்சியங்களில் பேணப்பட்டிருந்தது. ஆகையால், அதே இரசாயனங்கள் பல்வேறுபட்ட அளவுகளில் பல்வேறு இடங்களில் சேமிக்கப்பட்டிருந்ததுடன் பெறுமதியற்ற இருப்புக்கள் பேணப்பட்ட அதேநேரம் சில இரசாயனங்கள் காலாவதியாகியிருந்தது. |